


அமரர் திருமதி.

# வள்ளிநாயகம் கோபாலபிள்ளை

அவர்களின்

# நினைவுமலர்

(28-02-2006)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்மா! அம்மம்மா! அப்பாச்சி! பாட்டி!
நீர் எங்கள் தெய்வத்தாய்!

| அன்னை மடியில் | | ஆண்டவன் திருவடியில் |
|---|---|---|
| 10 |  | 29 |
| 04 | | 01 |
| 1917 | | 2006 |

# திதி வெண்பா

பார்த்திபவருடம் தைத்திங்கள் அமாவாசை
சேர் உத்தரட்டாதி ஞாயிறுதனில் ஊர்போற்ற
வாழ்ந்திட்ட மாதரசி வள்ளிநாயகம் இன்று
நீள்சடையோன் தாழ்சேர்ந்தார் அறி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## விநாயகர் துதி

பிடியத னுருவுமை கொள மிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

# தேவாரம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே
யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை
முழுமணித் தரளங்கள்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி
வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்
வழிபடு மதனாலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டும் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கை
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திரு வீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டு கண்டுள்ளம்
குளிரவென் கண் குளிர்ந்தனவே



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடல் ஈந்த பிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன் மன்னிய தில்லை
-தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

ஆதியாய் நடுவுமாகி யளவிலா வளவுமாகிச்
சோதியா யுணர்வு மாகித் தோன்றிய பொருளுமாகிப்
பேதியா வேகமாகிப் பெண்ணுமா யாணுமாகிப்
போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம் போற்றி போற்றி

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடு முகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசு முகம் ஒன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்க்கும் முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம் புணர வந்த முகம் ஒன்றே
ஆறுமுகம் ஆனபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி அரு ணாசலம் அமர்ந்த பெரு மாளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# திருக்கோணமலைப் பதிகம்

**பண் - புறநீர்மை**

திருச்சிற்றம்பலம்



நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

கடிதன வந்த கரிதனை யுரித்து
அள்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனைப் நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகத்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நன்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்தோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ் வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

அருவரா தொருகை வேண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் பலியுடன் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற் கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய லொடும் உடனாகித்
துன்றுமொண் பெளவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொண்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே.

குற்றமி லாதவர் குரைகடல்
சூழ்ந்த கோணமா மலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தர்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்ற முமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானி டைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



## திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

### சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பொய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச்சே யோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உன் மகிழும் கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன்யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்டவந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாகிப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய் பாம்பாகிப்
கல்லாய் மனிதராய் பேயாய்க் கணங்களாய்
வல்லரசு ராகி முனிவராயத் தேவராயச்
சொல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்

பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணுணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லற் பிறவியறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கைச் சுவடுகள்

சிவபூமி, தட்சணகைலாயம் என்றெல்லாம் போற்றப்படும், பாடல்பெற்ற புனிதபூமி திருக்கோணேஸ்வரம். இத்திருப்பதியிலே உயர் வேளாளர் குலத்தில் 10.04.1917இல் தந்தை இளையதம்பி வன்னியனார், தாயார் விசாலாட்சியின் கடைசி மகளாய்ப் பிறந்தார்.

வளர்ந்து வரும் காலத்தில் தக்க வயதை அடைந்ததும் திருவாளர் கோபாலபிள்ளை என்பவரைத் திருமணஞ் செய்து பிள்ளைகளைப் பெற்று வளர்த்து வரும் காலத்தில் கணவன் பிரிவு நிகழ்ந்தது.

இப் பெரும் இழப்பினால் தனது மனதைத் தளரவிடாது தனது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காக அவர்களை நெறிதவறாது பண்போடு வளர்த்து தக்க வயதில் இல்லறமென்னும் நல்லறத்தில் அனைவரையும் இணைத்தார்.

தனது பிற்கால வாழ்வை பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளுடன் இன்பமாகக் கழித்தார். அதேவேளையில் வில்லூன்றிக் கந்தனுக்கு பூக்கள் பறித்து சமர்ப்பிப்பதையும் தனது தலையாய கடமையாகக் கொண்டார். கோணேசர், காளியாச்சி, வில்லூன்றிக் கந்தா எனும் நாமங்கள் அவர் நாவில் அடிக்கடி வந்துகொண்டே இருக்கும். காலம் அவர் கால்களை முடக்கி, வீட்டிலிருக்கும் போதும் உள்ளூரிலும், கடல்கடந்தும் வாழும் பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுக்காக மனமுருகி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய்விட்டுப் பிரார்த்திப்பார். முதுமை வந்துற்ற போதும் தன் பிள்ளைகளுக்குக் கஷ்டம் கொடுக்காமல் வாழவேண்டும் என்பதைக் கடைசிவரை அவரின் அருகிலிருந்து கவனித்த மகளுக்கும், மகனுக்கும் கூறுவார்.

விசேட தினமானால் சின்னக் குழந்தையைப்போல் எழுந்து, இறைவழிபாடு முடித்து விபூதி துலங்க குட்டி மகளார், குட்டி மகனார் வருவார்கள் என வழிமேல் விழிவைத்து காத்திருப்பார். புத்தாடை, தீன்பண்டம், பணம் இவற்றை அவர்களிடம் பெற்று அனுபவிக்கும் மகிழ்வை வார்த்தைகளால் கூற முடியாது.

ஜனவரி 01 தான் அவரின் இறுதி எதிர்பார்ப்பாக இருந்தது. தன்குடும்பமே உலகமாய், எப்போதும் எல்லோருக்கும் நன்மையே நினைத்து வாழ்ந்த அந்த ஆத்மா 29.01.2006இல் அவரது எண்பத்தொன்பதாவது வயதில் உலகவாழ்வை விட்டுப் பிரிந்தது. நலந்தீங்கிலும் மறவாது அவர் நாவில் பயின்ற கோணேசர் திருத்தாளில் அவர் ஆத்மா நித்தியமாய் நிலைபெற்றிடும் என்பதே எமது நம்பிக்கையாம்.

**"அவர் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்திடுவோம்"**

**ஓம் சாந்தி!**

## தேற்றம்

***நீர்மேல் குமிழி வாழ்க்கை எனும் உண்மை***
***ஓர்வார் கவலை ஒழிப்பார் என்பதனால்***
***நாளும் நினைந்து நங்கடனைச் செய்தல்***
***வீழும் உடற்குறுதி காண்***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னையும் தந்தையுமாய் எமைத் தாங்கி வளர்ந்தீரே
ஆரும் குறை சொல்லாது எமக்கே உம் வாழ்வைத் தந்தீர்
அருமையான கல்வியோடு அருங்குணங்கள் தந்தீரே
உருகுதம்மா உளமெல்லாம் உன் பெருமை நினைக்கையிலே

- பிள்ளைகள் -

புதியவராய் கரம் பிடித்தோம்
புது வாழ்வில் தடம் பதித்தோம்
மக்கள், மருமக்கள் எனும் பேதம் காட்டாத
மாமி கண்டோம்
மனம் நிறைந்து கூறுகின்றோம்
மாமி நீங்கள் என்றும் எங்கள் தாய்

- மருமக்கள் -

பெற்றவர் மட்டும் அம்மா - எம்மைப்
பேணிக் காத்தவர் நீர்தான் தாயே
அம்மம்மா அப்பாச்சி எங்கே நீர் சென்றீரோ?
கடல் கடந்த தூரத்தில் கனத்த நெஞ்சுடனே
உடன் பிறந்தார் உற்றாரை பிரிந்து வாழும் எம் மனதில் நீங்கள்
"அப்பு", "தாயே" என்றழைத்து அரவணைக்கும் அன்புக்குரல்
எப்போதும் கேட்கிறதே
அம்மம்மா, அப்பாச்சி எங்கள் தாயே
மண்ணுள் மறைந்தேன் போனீர்?
மனமெல்லாம் வேகுதம்மா
நீர் எம்மீது கொண்ட அன்பையும்
எமக்குச் செய்த சேவையையும்
எப்படியம்மா நாம் மறப்பது?

- பேரப்பிள்ளைகள் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாட்டி எங்கள் தெய்வம்

எங்கள் தெய்வம் பாட்டி என்போம்
என்றும் எங்களை நல்வழியில் தட்டித்திருத்தி
வழிநடத்தி தடவி அணைக்கும் உங்கள் கரம்
பாட்டி நீங்கள் சொன்னபடி பார்த்து நாங்கள் நடந்திடுவோம்
உயர்ந்த வாழ்வு நலம் பெறவே உங்கள் ஆசி உதவிடுமே

- பூட்டப்பிள்ளைகள் -

## அபிஷேகத்தின் நன்மைகள்

01. சுத்தமான தண்ணீரால் இறைவனுக்கு அபிஷேகம் செய்வதால் நினைக்கின்ற காரியம் நிறைவேறும்.

02. நல்லெண்ணெயால் அபிஷேகம் செய்தால் வாழக்கை சுவையாகவும் சுகமாகவும் இருக்கும்.

03. பஞ்சகவ்வியத்தால் அபிஷேகம் செய்தால் பாபங்கள் நிவர்த்தியாகும்.
(பஞ்சகவ்வியம் என்பது பசுவின் பால், தயிர், நெய், கோமம், சாணம் இனை அனைத்தும் சேர்ந்தது)

04. பஞ்சாமிர்தத்தால் அபிஷேகம் செய்தால் உடல் நலம் பெறும். செல்வம் சேரும்.

05. பசும்பாலினால் அபிஷேகம் செய்தால் உடல் நலம் பெறும், செல்வம் சேரும். ஆயுள் அதிகரிக்கும்.

06. பசும் தயிரினால் அபிஷேகம் செய்தால் புத்திரவிருத்தி ஏற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. இளநீரினால் அபிஷேகம் செய்தால் குடும்பம் நலம் பெறும்.

08. சந்தனத்தால் அபிஷேகம் செய்தால் எட்டுவித செல்வம் உண்டாகும்.

09. நெல்லி முள்ளைப் பொடி செய்து அபிஷேகம் செய்தால் நோய்கள் நீங்கும்

10. தேன் அபிஷேகம் செய்தால் வாழ்வு இன்பமயமாகும்.

11. வாழைப்பழத்தால் அபிஷேகம் செய்தால் பயிர்கள் தழைக்கும்.

12. அன்னத்தினால் அபிஷேகம் செய்தால் ராஜபோக வாழ்வு கிடைக்கும்.

# அபிஷேகம் செய்ய உகந்த நாட்கள்

| | | |
|---|---|---|
| விநாயகர் | - | ஞாயிற்றுக்கிழமை |
| சிவன் | - | திங்கட்கிழமை |
| முருகப்பெருமான் | - | செவ்வாய்க்கிழமை |
| விஷ்ணு | - | புதன்கிழமை |
| தட்சணாமூர்த்தி | - | வியாழக்கிழமை |
| அம்பாள் | - | வெள்ளிக்கிழமை |
| கண்ணபிரான் மற்றும் அவரது அவதாரங்கள் | - | சனிக்கிழமை |
| நவக்கிரகங்கள் | - | ஞாயிற்றுக்கிழைமை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயில் தரிசன பலன்

| | | |
|---|---|---|
| காலை தரிசனம் | - | பிணிபோக்கும் |
| நண்பகல் தரிசனம் | - | தனம் கொடுக்கும் |
| மாலை தரிசனம் | - | பாவம் அகற்றும் |
| அர்த்தசாம தரிசனம் | - | வீடுபேறு அளிக்கும் |

# ஒருவருக்குத் தேவையான ஏழு குணங்கள்

01. தைரியமாக எக்காரியத்தையும் தொடங்கும் குணம்.
02. கற்பனைத் திறமையுடன் எதையும் பார்க்கும் குணம்.
03. ஆழ்ந்து சிந்தித்து வேலைகளை ஒழுங்குபடுத்தி அமைக்கும் குணம்.
04. நேரத்தையும் பணத்தையும் திட்டமிட்டு செலவு செய்யும் குணம்.
05. சிந்தனையை சிதறவிடாது ஒருமுகப்படுத்தி கவனமுடன் செயற்படும் குணம்.
06. எப்பொழுதும் சுறுசுறுப்புடனும் ஊக்கத்துடனும் இருக்கும் குணம்.
07. தன்னை அடக்கித் திருத்திக் கொள்ளும் குணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்லல்

**என் நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம்**
**உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு**

- மரணச் செய்தி அறிந்து வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும்,
- இறுதிச் சடங்குகளில் கலந்துகொண்டு எல்லா வகைகளிலும் உதவி புரிந்த நல்லுள்ளங்களுக்கும்,
- அன்னாரின் மறைவு கேட்டு தொலைபேசி மூலமும் தந்திகள் வாயிலாகவும் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறிய அன்பு நெஞ்சங்களுக்கும்,
- மற்றும் எல்லா வகையிலும் உதவிய நல்லுள்ளங்களுக்கும்

எங்கள் மனம் நிறைந்த
நன்றிகளை
பணிவுடன் நல்கின்றோம்.

வணக்கம்.

**இவ்வண்ணம்,**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டுவந்தாய்?
அதை நீ இழப்பதற்கு,
எதை நீ படைத்திருக்கிறாய்,
அது வீணாகுவதற்கு,
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது,
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது,
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது,
மற்றொரு நாள்
அது வேறொருவருடையதாகும்.





"இந்தமாற்றம் உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமாகும்."
**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org